Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
ISO : 9001:2015; QT-57977/1125

செய்தியாளர்கள் தேவை



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 131 | வெள்ளிக்கிழமை Friday | 13.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# எரிபொருள் தட்டுப்பாடு அச்சம் வேண்டாம்

## பொதுமக்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்




சென்னை: "போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக ஒன்றிய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்கள் யாரும் அச்சப்படவோ, பதற்றம் கொள்ளவோ வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்" என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், சென்னை: மேற்கு ஆசியாவில் மோசமடைந்து வரும் போர் சூழ்நிலையால் எல்பிஜி சிலிண்டர் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் வீடு, வணிகம் மற்றும் தொழில் துறை நுகர்வோருக்கு தடையற்ற எல்பிஜி எரிவாயு விநியோகம் செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிப் பூரிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் அவர், 'ஈரான் மற்றும் பிற வளைகுடா நாடுகளை உள்ளடக்கிய வளைகுடா பகுதிகளில் தொடரும் போர், இந்தியாவிற்கான எல்பிஜி எரிவாயு விநியோகத்தினை வெகுவாகச் சீர்குலைத்துள்ளது. மேற்கு ஆசியாவிலிருந்து எல்பிஜி எரிவாயு இறக்குமதியை இந்தியா அதிகமாகச் சார்ந்திருப்பது நிலைமையை மோசமாக்கியுள்ளது. தமிழ்நாட்டில் வீட்டு உபயோகத்திற்கான எல்பிஜி எரிவாயுத் தேவை மாதத்திற்கு சுமார் 200 மெட்ரிக் டன் என்ற அளவிலும், வணிகம் மற்றும் தொழில் துறைகளின் தேவை மாதத்திற்கு மேலும் 20 மெட்ரிக் டன் என்ற அளவிலும் உள்ளது. தற்சமயம், விநியோகக் கட்டுப்பாடுகளைக் கருத்தில்கொண்டு, எண்ணெய் நிறுவனங்கள் வீட்டு இணைப்புகளுக்கு முன்னுரிமை அளித்து, தொழில் துறை மற்றும் வணிக நுகர்வோருக்கு எல்பிஜி விநியோகத்தை நிறுத்தியுள்ளன.

ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் சிறிய உணவகங்கள் பெரும்பாலும் தங்கள் செயல்பாடுகளுக்கு எல்பிஜி எரிவாயு விநியோகத்தையே சார்ந்துள்ளன. இந்நிலையில், எல்பிஜி எரிவாயு விநியோகத்தின் திடீர் நிறுத்தம் ஹோட்டல்துறைக்குஒருநெருக்கடியை உருவாக்கியுள்ளதுடன், அவற்றில் பல மூடப்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது வருத்தமளிக்கிறது. பெருமளவில் தொழில்மயமாக்கப்பட்ட மாநிலமான தமிழ்நாட்டில், பெரிய தொழில்கள் தவிர, அதிக எண்ணிக்கையிலான குறு, சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்கள் உள்ளன. இவற்றில், பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளுக்கு எல்பிஜி எரிவாயுவை பயன்படுத்தும் நிலையில், எரிவாயு விநியோகத்தின் திடீர் நிறுத்தம் அவர்களை கடுமையாக பாதிக்கும். இதனால், மேலும் பல சிறு தொழில் நிறுவனங்கள் மூடப்பட வேண்டிய சூழலை எதிர்கொள்ள நேரிடும். இதனை ஈடுசெய்வதற்கான மாற்று எரிபொருள் மாற்றத்திற்கு அதிக காலமும், கணிசமான செலவும் ஏற்படும். எனவே, தமிழ்நாட்டில் உள்ள வீடுகள், வணிகம் மற்றும் தொழில் துறை நுகர்வோருக்கு தடையற்ற எல்பிஜி எரிவாயு விநியோகம் செய்வதை உறுதி செய்ய மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், முன்னெப்போதும் இல்லாத இந்த நெருக்கடியைச் சமாளிக்க மத்திய அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் தமிழ்நாடு அரசு துணைநின்று, ஆதரவளிக்கும்' என்று அந்த கடிதத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டின் பொறுப்பு ஆளுநராக ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் பதவியேற்பு




சென்னை:

தமிழ்நாட்டின் பொறுப்பு ஆளுநராக ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் பதவி ஏற்றுக் கொண்டார்.

மேற்கு வங்க ஆளுநராக பதவி வகித்து வந்த சி.வி. அனந்த போஸ் தனது பதவியை கடந்த வாரம் திடீர் ராஜிநாமா செய்தார். அவரது ராஜிநாமாவை ஏற்றுக் கொண்ட குடியரசு தலைவர் திரௌபதி முர்மு, தமிழ்நாட்டில் ஆளுநராக பணியாற்றி வந்த ஆர்.என். ரவியை மேற்கு வங்க ஆளுநராக நியமனம் செய்து உத்தரவிட்டார். தமிழ்நாட்டிற்கு கேரள ஆளுநரான ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், கூடுதல் பொறுப்பு ஆளுநராக நியமனம் செய்து குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு உத்தரவிட்டார். கடந்த 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழ்நாடு ஆளுநராக நியமிக்கப்பட்ட ஆர்.என். ரவி சுமார் நான்கரை ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இந்த நிலையில் தமிழ்நாட்டில் தனது பணியை முடித்துக் கொண்ட ஆளுநர் ஆர்.என். ரவி, தனது கோப்புகளை ஒப்படைத்து விட்டு நேற்று சென்னையில் இருந்து புறப்பட்டுச் சென்றார். ஆளுநர் ஆர்.என். ரவிக்கு சென்னை பழைய விமான நிலையம் பகுதியில், தமிழ்நாடு காவல் துறை சார்பாக மரியாதை அளிக்கப்பட்டு, தமிழ்நாடு காவல் துறை மற்றும் அரசின் உயர் அதிகாரிகள் மரியாதை உடன் வழி அனுப்பி வைத்தனர். தமிழ்நாட்டுக்கு புதிய கூடுதல் பொறுப்பு ஆளுநராக நியமனம் செய்யப்பட்ட ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகர் சென்னை கிண்டியில் ஆளுநர் மாளிகையில் (மக்கள் பவன்) இன்று பதவி ஏற்றுக் கொண்டார்.

தமிழ்நாடு அரசின் பொறுப்பு ஆளுநராக ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகருக்கு, சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இந்த நிகழ்வில் தமிழ்நாடு முதலமை ச்சர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு சட்டப் பேரவை சபாநாயகர் அப்பாவு, அமைச்சர்கள், முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். மத்திய இணை அமைச்சர் எல். முருகன், பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

# தேசிய ஜனநாயக கூட்டணிக்கு விஜய் வருகிறாரா? அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விளக்கம்



திருச்சி: தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு தவெக வரப் போவதாக செய்திகள் அடிபட்டு வரும் நிலையில், இதுகுறித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விளக்கம் அளித்துள்ளார்.

திருச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்ற பொதுக்கூட்டம் நிறைவடைந்ததும், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருந்தார். அப்போது அவரை மத்திய அமைச்சர்கள் பியூஷ் கோயல், எல்.முருகன் ஆகியோர் சந்தித்து பேசினர்.

இதைத் தொடர்ந்து, அங்கிருந்த செய்தியாளர்களை சந்தித்து எடப்பாடி பழனிச்சாமி பேசினார். அவர் கூறுகையில், "பியூஷ் கோயல் இரண்டு முறை என்னை பேசியது தொகுதிப் பங்கீடு சம்பந்தமாக அல்ல. தேர்தல் பணிகளை எவ்வாறு வகுப்பது என்பது குறித்தே பேசினோம். தொகுதிப் பங்கீடு இறுதி செய்யப்பட்டால் உங்களை (செய்தியாளர்கள்) அழைத்து சொல்லி விடுவோம்" என்றார்.

தொடர்ந்து, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தவெகவை கொண்டு வர பேச்சுவார்த்தை நடைபெறுகிறதா? என நிருபர்கள் கேள்வியெழுப்பினர். அதற்கு பதிலளித்த அவர், "தவெகவிடம் கூட்டணி குறித்து பேசவில்லை. நீங்கள்தான் அப்படி ஒரு செய்தியை பரப்பிக் கொண்டு இருக்கிறீர்கள். நீங்களாக கற்பனை செய்து இவ்வாறு கேள்வி கேட்டால், நாங்கள் என்ன செய்வது? அப்படி எந்த பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை" என்றார்.

அப்போது நிருபர் ஒருவர், "விஜய்க்கு சிபிஐ நெருக்கடி கொடுக்கிறதா?" என கேட்டார். அதற்கு பதிலளித்த எடப்பாடி பழனிசாமி, "அது அவர்கள் (தவெக) பிரச்சனை. அதை அவர்கள் பார்க்கப் போகிறார்கள். அனைவரின் மீதும் தான் வழக்குகள் உள்ளன. எங்கள் மீதும் வழக்குகள் உள்ளன. நாங்கள் அதை சந்திக்க நீதிமன்றம் செல்கிறோம். அவர்களும் வழக்கை எதிர்கொள்வார்கள். மற்றபடி, மறைமுகமாக ஒரு அழுத்தம், நேரடியாக ஒரு அழுத்தம் எல்லாம் எப்படி கொடுப்பார்கள் எனத் தெரியவில்லை" எனக் கூறினார்.

தொடர்ந்து, திமுக ஆட்சி குறித்து பேசிய அவர், "எப்போது பார்த்தாலும் மத்திய அரசு எதையும் செய்யவில்லை என முதலமைச்சர் ஸ்டாலின் கூறுகிறார். ஆனால், பிரதமர் ஒவ்வொரு முறை இங்கும் வரும்போது வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை கொடுக்கிறார்,.

பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் தொடங்கியும் வைத்துள்ளார். மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்த தற்போது ஒப்புதல் கொடுத்துள்ளார். மக்கள் மத்தியில் திமுக ஆட்சியின் அவலங்களை எடுத்துக் கூறியுள்ளார். துரதிஷ்டவசமாக, ஸ்டாலினுக்கு ஆட்சிக் கட்டில் கிடைத்துள்ளது. எங்களை எதிர்த்து நேரடியாக மோத முடியாத காரணத்தால் அதிமுகவை தரம் தாழ்ந்து முதலமைச்சர் விமர்சிக்கிறார்" என எடப்பாடி பழனிசாமி கூறினார்.




# தங்கம் விலை பவுனுக்கு ரூ.1200 குறைவு



22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.1200 குறைந்து விற்பனையாகிறது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.10 குறைந்துள்ளது.

சர்வதேச பொருளாதார நிலவரம் மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

இந்தச் சூழலில், தொடர்ச்சியாக தங்கம் விலை உயர்ந்தும் குறைந்தும் வருகிறது. உலக நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ரீதியான உறவு இதற்கு முக்கி ய காரணம் என துறை சார்ந்த வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். சென்னையில் வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.150 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,970-க்கும், பவுனுக்கு ரூ.1200 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,19,760-க்கும் விற்பனை ஆகிறது. 24 காரட் தங்கம் ஒரு கிராம் 16,331-க்கும், 18 காரட் தங்கம் கிராம் ரூ.12,700-க்கும் விற்பனை ஆகிறது. வெள்ளி விலை இன்று ஒரு கிராம் ரூ.290-க்கும், கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.2,90,000-க்கும் சந்தையில் விற்பனை ஆகிறது.

# தூத்துக்குடியில் மாவட்ட தலைமை அலுவலகத்தில் சமத்துவ மக்கள் கழகத்தின் 11ம் ஆண்டு துவக்க விழா



சமத்துவ மக்கள் கழகம் 11ம் ஆண்டு துவக்க நாள் விழா தூத்துக்குடியில் மாவட்ட தலைமை அலுவலகத்தில் வைத்து மாவட்டச் செயலாளர் மாலைசூடி அற்புதராஜ் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது மாநில தொழிற்சங்க செயலாளர் ஜெபராஜ் டேவிட் கட்சி கொடியேற்றினார் மாநில கலை இலக்கிய அணி செயலாளர் வக்கீல் அந்தோணி பிச்சை மாநில வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர் வக்கீல் சகாயராஜ் ஆகியோர் இனிப்புகள் வழங்கினார்கள் நிர்வாகிகள் அனைவரும் காமராஜர் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள் மாவட்டச் செயலாளர் மாலைசூடி அற்புதராஜ் கேக் வெட்டினார் விழா முடிவில் அனைவருக்கும் மதிய உணவு வழங்கினார். இவ்விழாவில் நாடார் பேரவை மாவட்ட தலைவர் அருண் சுரேஷ் குமார் மாவட்ட செயலாளர் டேனியல் ராஜ் வழக்கறிஞர் அணி தலைவர் வக்கீல் குணசேகரன் ,வக்கீல் வைகுந்த் மகளிர் அணி தலைவி சந்திரா மற்றும் சமத்துவ மக்கள் கழகம் மாவட்ட அவைத் தலைவர் கண்டிவேல் மாவட்ட பொருளாளர் பழனிவேல் மாவட்ட துணைச்செயலாளர்கள் அந்தோணி சேவியர், அருள்ராஜ் மாவட்ட இளைஞரணி செயலாளர் ஜெயகசமாடன் மாவட்ட மாணவர் அணி செயலாளர் பாலமுருகன் மாவட்ட தொண்டர் அணி செயலாளர் முத்து செல்வம் மாவட்ட தொழிலாளர் அணி செயலாளர் சங்கர் மாவட்ட விவசாய அணி செயலாளர் கனகராஜ் மாவட்ட மகளிர் அணி செயலாளர் குருவம்மாள் மகளிர் அணி நிர்வாகிகள் ஜேசு செல்வி, சாந்தி, ராசாத்தி, பிரம்மசக்தி, கன்னியம்மாள், ரேவதி மாவட்ட தொழிலாளரணி துணைச் செயலாளர் சண்முக குமார் மாநகரச் செயலாளர் முத்து செல்வம் மாநகர அவை தலைவர் மதியழகன் மாநகரப் பிரதிநிதிகள் சாமுவேல், ஞானராஜ் மாநகர மாணவரணி செயலாளர்விஜய்கார்த்திக் மாநகர வர்த்தக அணி செயலாளர் தொம்மை குரூஸ் வர்த்தக அணி துணைச் செயலாளர் முத்துக்குமார் மற்றும் மாநகர வார்டு செயலாளர்கள் சந்தனகுமார், செல்வராஜ் ,ஜெயகர், ஐசக் ,செல்வகுமார், ஸ்ரீகாந்த் ,ஹரி ராமகிருஷ்ணன், பென்கர் ,சுந்தர்ராஜ், ஆனந்தராஜ், மதன்குமார் ,ராஜேஷ் ,ராமச்சந்திரன், மகாராஜா, குரு ராமசுப்பிரமணியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் உலக மகளிர் தின விழா கொண்டாட்டம்




தென்காசி மாவட்டம் ஆலங்குளம் பகுதியில் அமைந்துள்ள சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் உலக மகளிர் தினவிழாமிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழா கல்லூரியின் தலைவர் பொறியாளர் ஜீசஸ் ராஜா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெற்றது. நிகழ்ச்சியின் தொடக்கமாக தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா இனிதே துவங்கியது. இவ்விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் ஜெயக்குமார் தலைமைவகித்தார்.கல்லூரியின்நிர்வாகஇயக்குனர் பேராசிரியர் கனக பாண்டியன் முன்னிலை வகித்தார்.விழாவின் சிறப்பு விருந்தினராக மனோன்மணியம் சுந்தரனார்பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் அறிவியல் துறையின் பேராசிரியராக பணியாற்றி பணி நிறைவு பெற்ற முனைவர் விஜயலெட்சுமி கலந்து கொண்டார்.இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவி சசி வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து நிகழ்ச்சியில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர்களுக்கு கல்லூரியின் ஒருங்கினைப்பாளர் பேராசிரியர் பேராட்சி பொன்னாடை அணிவித்து கௌரவித்தார். தொடர்ந்து நிகழ்ச்சியில் பங்கேற்ற விருந்தி னர்களுக்கு கல்லூரியின் முதல்வர் மற்றும் நிர்வாக இயக்குனர் ஆகியோர்இணைந்துநினைவுப் பரிசுகளை வழங்கினார்கள். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற பேராசிரியை முனைவர் விஜயலட்சுமி தனது உரையில்பெண்களின் கல்வி சமூக முன்னேற்றம் மற்றும் தன்னம்பிக்கை குறித்து மாணவிகளுக்கு பயனுள்ள வகையில் உரையாற்றினார். மேலும் பெண்கள் சமூகத்தில் வகிக்கும் முக்கிய பங்கு மற்றும் அவர்களின் சாதனை குறித்து விரிவாக எடுத்துரைத்தார் தொடர்ந்து மகளிர் தினத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் கல்லூரி மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இவ்விழாவில் துறை தலைவர்கள்,பேராசிரியர்கள் மாணவிகள் மற்றும் அலுவலக பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விழாவின் நிறைவில் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பொறியியல் கணினி அறிவியல் பயிலும் மாணவி சப்ரின் நன்றி கூறினார். இறுதியாக தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.



கடலூர் மாவட்டம் திட்டக்குடியில் நடைபெற்ற திமுக சார்பு அணிகளின் நிர்வாகிகள் கூட்டம் மற்றும் கலைஞர் நூலகம் திறப்பு விழாவில் பங்கேற்க வருகைதந்த தமிழக துணை முதலமைச்சரும், கழக இளைஞரணிச் செயலாளருமான மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மங்களூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில், முன்னாள் மங்களூர் சேர்மனும் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளருமான கே.என்.டி. சுகுணா சங்கர் தலைமையில் திரளான கட்சியினர் ஒன்றுதிரண்டு இந்த பிரம்மாண்ட வரவேற்பினை அளித்தனர். நிகழ்வின் போது, துணை முதலமைச்சருக்கு சிறப்பு நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், அங்கு அமைக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான கொடிக்கம்பத்தில் அவர் திமுக கொடியை ஏற்றி வைத்து சிறப்பித்தார்.

# பெட்ரோல் பங்குகளில் குவியும் பொதுமக்கள்



அமெரிக்கா இஸ்ரேல் - ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே நடைபெற்று வரும் போர் சூழ்நிலையின் காரணத்தால் நாடெங்கும் பெட்ரோல் டீசல் பற்றாக்குறை எனும் தகவல் சமூக வலைதளங்களில் பரவியதால் மக்களிடையே பெரும் பதற்றம் நிலவுகிறது. இத்தனைத் தொடர்ந்து திருக்கோவிலூர் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பெட்ரோல் பங்குகளில் ( திருப்பாலபந்தல், ஜி.அரியூர், செங்கனாங்கொள்ளை,ரிஷிவத்தியம் ) அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பெட்ரோல் பங்குகளில் பொதுமக்கள் திரண்டு பெட்ரோல் கிடைக்குமா கிடைக்காத என்னும் அச்சத்தில் கையில் கேண்களுடன் நெடுநேரம் வரிசையில் நின்று காத்துக் கொண்டுள்ளனர். பங்கின் உரிமையாளர்கள் இத்தகவல் பொய்யானது என எடுத்துரைத்தும் மக்கள் அதனை உணராமல் நெடுநேரம் பங்கில் காத்திருந்து பெட்ரோல் டீசல் வாங்கிக்கொண்டுசெல்கின்றனர். இதனால் வாகன ஓட்டிகள் மற்றும் நான்கு சக்கர வாகனங்களை வாடகைக்கு ஏற்றும் டிரைவர்கள் பெரும் இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொண்டு வருகின்றனர் இதற்குதக்கநடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்துகின்றனர் வாகன ஓட்டிகள்

# மயிலாடுதுறை இரயிலுக்கு காரைக்குடியில் மாபெரும் வரவேற்பு



காரைக்குடியிலிருந்து 2012 ஆம் ஆண்டுக்கு முன்பு ஓடிக் கொண்டிருந்த மயிலாடுதுறை பாசஞ்சர் ரயில் மீண்டும் 2026 ல் இயக்கப்பட்டது.,இந்த ரயில் வந்ததும், பேண்டு வாத்தியம், டிரம் செட் இசையுடன், பயணிகள் கையில் இந்தியக் கொடியுடன் வரவேற்றார்கள்.,இந்த ரயில கிழக்கு டெல்டா பகுதி பயணிகளுக்கு மிகவும் பயன் தரும் வண்டி. 24 நிலையங்களை கடந்து செல்கிறது.நேற்று(மார்ச் -11)மாலையில்தொடங்கிய ரயில் இரவு 10 : 15 மணிக்கு காரைக்குடி நிலையம் 4ஆவது நடைமேடைக்கு வந்தது.,அது சமயம் காரைக்குடி தொழில் வணிகக்கழகம், இரயில் பயணிகள் நலச்சங்கம் சார்பில் வரவேற்பு அளித்தும்,ஓட்டுநர்கள், கார்டு, ஊடகவியலர் சிபி குமார் ஆகியோருக்கு பயனாடைகளை தலைவர் சாமிதிராவிடமணி துணைத் தலைவர் GTS.சத்திய மூர்த்தி, இணைச் செயலாளர் S.சையது, இரயில் பயணிகள் சங்க நிர்வாகி சாயிதர்மராஜ், செயற்குழு உறுப்பினர். இரா. பரமேஸ்வரன், ஆகியோர் அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்கள்.

அப்போது நிலைய மேலாளர் பரத்பஸ்வான், டிராபிக் இன்ஸ்பெக்டர் அருணாசலம், இரயில்வே துறை பணியாளர்களான பொலையா, அதில், வினோஜ், குமார், குப்பக்குமார், ஆகியோர் உடன் இருந்து வரவேற்பு ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்கள்.

## விளாத்திகுளம் வேடநத்தம் அருகே

# 12ஆம் வகுப்பு பள்ளி மாணவிக்கு பாலியல் வன்கொடுமை செய்து கொலை

## சம்பவத்தை கண்டித்து பொதுமக்கள் சாலையை மறித்து போராட்டம்.



▶ மாணவி பிரதீபா.

தூத்துக்குடி மாவட்டம் குளத்தூர் அருகே வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த 17 வயது மாணவி, குறுக்குச்சாலை அரசு மேல்நிலைப் பள்ளியில் 12-ஆம் வகுப்பு பயின்று வந்தார். நேற்று இரவு இயற்கை உபாதை கழிப்பதற்காக வீட்டை விட்டுவெளியேசென்றவர், நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை.



அதிர்ச்சியடைந்த பெற்றோர் இரவு முழுவதும் தேடியும் மாணவி கிடைக்காததால், குளத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து மாணவியைத் தேடி வந்தனர்.

இந்நிலையில், வேடநத்தம் கிராமத்தின் எல்லைப்பகுதியில்அந்தமாணவி ஆடைகள் கலைந்த நிலையில், பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார். தகவல் அறிந்த குளத்தூர் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். தடய அறிவியல் நிபுணர்கள், கைரேகை நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் வரவழைக்கப்பட்டுத் தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பின்னர், மாணவியின் உடல் பிரேதப் பரிசோதனைக்காகத் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மாணவியின் மரணத்திற்கு நீதி கேட்டு வேடநத்தம் கிராம மக்கள் கிழக்கு கடற்கரை சாலையில் (ராமேஸ்வரம் செல்லும் பாதை) அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. 100-க்கும் மேற்பட்ட போலீசார் அங்கு குவிக்கப்பட்டனர்.

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. மதன் சம்பவ இடத்திற்குச் சென்று மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். கொலையாளிகளைக் கைது செய்யும் வரை போராட்டத்தைக் கைவிட மாட்டோம்" என மக்கள் சுமார் 4 மணி நேரம் மறியலில் ஈடுபட்டனர். இறுதியில், குற்றவாளிகளை இன்றிரவுக்குள் கைது செய்துவிடுவோம்எனபோலீசார்உறுதியளித்ததைத் தொடர்ந்து போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

இது தொடர்பா க குளத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து, 6 தனிப்படைகள் அமைத்துக் குற்றவாளிகளைத் தேடி வருகின்றனர்.

மாணவி காணாமல் போனபோது புகார் அளிக்க வந்த பெற்றோரை அவதூறாகப் பேசி, விசாரிக்காமல் அலட்சியப்படுத்தியதாக விளாத்திகுளம் மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் பிரவீனா மீது புகார் எழுந்தது. இதையடுத்து, நெல்லை சரக டி.ஐ.ஜி சரவணன் அவரைப் பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார்.

இக்கொடூரச் சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளைப் பிடிக்க 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. கொலையின் பின்னணி மற்றும் இதில் தொடர்புடைய நபர்கள் குறித்துப் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். அசம்பாவிதங்களைத் தவிர்க்க வேடநத்தம் கிராமத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# சிட் பண்ட் கம்பெனி நடத்தி பல லட்சம் ரூபாய் பண மோசடி செய்த வழக்கில் இரண்டு நபர்கள் கைது



ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவில் கடந்த 13.01.2026 ம் தேதி, கருங்கல்பாளையத்தில் உள்ள நாடார் முன்னேற்ற சங்க அலுவலகத்தில் மாதாந்திர ஏலச்சீட்டு நடத்தி வந்த ராஜேந்திரன் (67), த/பெ ராமசாமி நாடார், 121/3, கமலா நகர், கருங்கல்பாளையம் மற்றும் ராஜேந்திரனின் மகன் செந்தில்குமார் (43) ஆகியோர் ஏலத்தில் உறுப்பினரான கருங்கல்பாளையம், குயிலான் தோப்பு 3வது வீதியைச் சேர்ந்த மான்ராஜா மகன் செல்வக்குமார் (54) என்பவருக்கு ஏலத்தில் எடுத்த பணம் ரூ 10,56,840/- ஐ தராமலும் மற்றும் ஏலச்சீட்டில் சேர்ந்திருந்த வாடிக்கையாளர்களின் பல லட்ச ரூபாய் பணத்தை ஏமாற்றிவிட்டு தலைமறைவாகி விட்டதாக மேற்படி ஏலச்சீட்டு நடத்தியவர்கள் மீது செல்வக்குமார் கொடுத்த புகாரின் பேரில் மாவட்ட குற்ற பிரிவு போலிசார் விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் பணத்தை ஏமாற்றி விட்டு தலைமறைவான ராஜேந்திரன் மற்றும் செந்தில்குமார் ஆகிய இருவரையும், 11.03.2026 ம் தேதி அன்று கைது செய்து, மோசடி வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட உள்ளனர் என்பதை ஈரோடு மாவட்ட காவல்துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## 2026 சட்டமன்றத் தேர்தலில் வி.சி.க. சார்பில்

# திமுக கூட்டணியில் 15 இடங்கள் கேட்டுள்ளதாக கட்சி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது

## சோழவந்தான் பெரியகுளம் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய தொகுதிகளை விசிக போட்டியிட விருப்பம்

திருப்பரங்குன்றம் தனியார் திருமண மண் திருமண மண்டபத்தில் விசிக சார்பில் ஒன்றிய பகுதி வட்டம் என புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் நடைபெற்றது

இந்த அறிமுக கூட்டத்தில் எல்லாளன் தலைமைவைத்தார்இதில் வீசி கா சார்பில் சுமார் 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

இதனால் புதிய நிர்வாகிகளுக்கு சால்வை அணித்து மரியாதை செய்யப்பட்டு வரவேற்கப்பட்டது

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி நீண்ட நாட்களாக இருப்பதாலும் கூட்டணி சார்பில் சுமார் 15 இடங்கள் போட்டியிட விருப்பம் தெரிவித்ததாகவும் அதற்கு தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் இடங்களை ஒதுக்கிடுவார் என்று குறிப்பாக தென் மாவட்டங்களில் இதுவரை ஒதுக்கீடு செய்யவில்லை இனிவரும் காலங்களை தென் மாவட்டங்களில் பெரியகுளம் ஸ்ரீவில்லிபுத்தூர் சோழவந்தான் ஆகிய தொகுதிகளை விடுதலை சிறுத்தை கட்சி சார்பாக கேட்டுள்ளோம் என்று அந்தக் கட்சியின் மாநில நிர்வாகி எல்லாளன் தெரிவித்துள்ளார்





தமிழக முற்போக்கு மக்கள் கட்சி சார்பாக

## கோவை சிவானந்தா காலனி டாடாபாத் பகுதியில் நடைபெற்ற கன்டன ஆர்ப்பாட்டம்

### பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து

### தமிழக அரசை வலியுறுத்தி கன்டன முழக்கங்களை எழுப்பினர்

தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து , கோவை சிவானந்தா காலனி டாடாபாத் பகுதியில், கன்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் இக்கட்சியின் மாநில தலைவர் வழக்கறிஞர் சக்தி வேல் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தை, தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவரும் வழக்கறிஞருமான புஸ்பாணந்தம் தலைமை தாங்கினார். இந்த ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக கோவை மாநகராட்சியில் உள்ள ஐந்து மண்டலங்களிலும் பணிபுரியும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் 3500 வரை, பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் எனவும், தாட்கோ அலுவலகம் மூலம் எஸ்.சி மற்றும் எஸ்டி மக்களுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் காலதாமதம் இல்லாமல் கடன் வழங்க வேண்டும் எனவும்,தமிழகம் முழுவதும் உள்ள ஒன்றே முக்கால் கோடி தேவேந்திர குல வேளாளர் வேளாளர் சமூக மக்களை,எஸ்.சி பட்டியலில் இருந்து பிசி அல்லது எம்.பி.சி பட்டியில் சேர்க்கப்பட வேண்டும் எனவும், கோவை செல்வபுரத்தில் உள்ள தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அலுவலகத்தில், நடைபெறும் முறைகேடுகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், இதில் தகுதியானவர்களுக்கு உடனடியாக அடுக்குமாடி குடியிருப்பு வீடுகளை ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனவும், கோவை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசின் மூலம் பட்டா வழங்கப்பட்டுள்ளது ஆனால், இன்று வரை அதற்கான இடத்தைஅளவீடுசெய்து தரப்படவில்லை எனவும், அவர்களுக்கு உடனுக்குடன் அவர்களது இடங்களை அளவீடு செய்து தரவேண்டும், கோவை நீதிமன்றவளாகம் முன்பு சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவருக்கு முழு வெண்கல சிலை அமைத்து தரப்பட வேண்டும், கோவை மாவட்டம் வடக்கு தாலுகா நம்பர் 24 வீரபாண்டி கிராமத்தில், புறம்போக்கு இடங்கள் அதிக அளவில் உள்ளது இங்கு பொது மக்களுக்கு பட்டா வழங்க வேண்டும் எனவும் என்பது, உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கன்டன முழக்கங்களை எழுப்பியவாறு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில்,

வழக்கறிஞர் குமாஸ்தாக்கள் லட்சுமி, பத்மா, செல்வராஜ், அமல் ராஜ், பால்ராஜ்,அந்தியூர்காமராஜ், பரமேஸ்வரன், வீரன், தேசிய மக்கள் கட்சி சக்தி சார்பாக தனசேகரன்,துடியலூர் உலகநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## கோவை பார்க் கல்வி குழுமத்தில் நெகிழ்ச்சி

## 10 மாணவ, மாணவிகளின் ஓராண்டு கல்விக்கட்டணம் ரத்து

### 'ஐகானிக் மாம்' விருது வழங்கி

### சி.இ.ஓ. அனுஷா ரவி அதிரடி உத்தரவு



கோவை பார்க் கல்வி குழுமத்தின் சார்பில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு "ஐகானிக் மாம் 2026" விருது வழங்கும் விழா, கல்லூரி அரங்கத்தில் விமர்சயாக நடைபெற்றது. கல்வி குழுமத்தின் தலைவர் டாக்டர் ரவி மற்றும் முதன்மை செயல் அதிகாரி டாக்டர் அனுஷா ரவி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டனர் ஒவ்வொரு ஆண்டும் 'துர்கா' என்ற பெயரில் சாதனைப் பெண்களைக் கௌரவித்து வரும் நிலையில்,இந்த ஆண்டு மாணவ, மாணவிகளின் தாயார்களைக்கௌரவிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கில் இந்த விருது அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்காக மாணவ, மாணவிகள் தங்கள் தாயார் குறித்து பேசிய காணொளிகள் வரவேற்கப்பட்டன. 752 காணொளிகளில், முதல் கட்டமாக 35 காணொளிகள் தேர்வு செய்யப்பட்டு, பின்னர் சமூக வலைதள வாக்கெடுப்பு மூலம் இறுதிப் பட்டியலாக 10 சிறந்த காணொளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.விழாவின் சிகர நிகழ்வாக, அந்த 10 சிறந்த மாணவ,மாணவிகளின் தாயார்களும் மேடைக்கு அழைக்கப்பட்டு அவர்களுக்குக் கிரீடம் சூட்டப்பட்டு, கேடயம் மற்றும் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மாணவ, மாணவிகள் தங்கள் தாயார் குறித்துப் பேசிய உணர்ச்சிப்பூர்வமான காணொளிகள் திரையிடப்பட்ட போது, அரங்கமே நெகிழ்ச்சியில் ஆழ்ந்தது. அந்தத் தருணத்தில் மேடையில் பேசிய டாக்டர் அனுஷா ரவி, சாதனைபடைத்தஅந்த 10 மாணவ,மாணவிகளின் ஓராண்டு கல்விக்கட்டணத்தை முழுமையாக ரத்து செய்வதாக அதிரடி அறிவிப்பை வெளியிட்டார். இந்த எதிர்பாராத அறிவிப்பு தாய்மார்களையும்மாணவ, மாணவிகளையும் ஆனந்தக் கண்ணீரில் நனைய வைத்தது. சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற மேடைப் பேச்சாளர் சாந்தாமணி பேசுகையில், இந்த நிகழ்வு தன்னையே கண்கலங்க வைத்துவிட்டதாகக் குறிப்பிட்டார். மகளிர் தினத்தின் போராட்ட வரலாற்றையும் பெண்களின் சாதனைகளையும் விளக்கிய அவர், பெற்றோர்கள் உயிரோடு இருக்கும்போதே அவர்களைக் கௌரவிக்க வேண்டும் என்றும்,காலம் கடந்த பின் வருந்துவதில் பயனில்லை என்றும் மாணவ, மாணவிகளுக்கு அறிவுரை வழங்கினார். கல்விக்கட்டண ரத்து மற்றும் கௌரவிப்பு நிகழ்வுகளால் இந்த மகளிர் தினக் கொண்டாட்டம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக அமைந்தது.

## ஆண்டுக்கு மூன்று லட்சம் வருமானத்திற்கு கீழ் உள்ளவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம் அமைச்சர் கீதா ஜீவன் அறிவிப்பு



தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கேடி முடிக்கப்பட்ட 528 அடுக்குமாடி குடியிருப்புகளை அமைச்சர் கீதா ஜீவன் சட்டமன்ற உறுப்பினர் சண்முகையா ஆகியோர் திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டுக்கு வழங்கினார்கள்.

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் ரூ.64.17 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 528 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு பணிகள் நிறைவு வெற்றிலை தொடர்ந்து அதன் திறப்பு விழா இன்று நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் சண்முகையா ஆகியோர் கலந்து கொண்டு அடுக்குமாடி குடியிருப்பை திறந்து வைத்து வீடு கேட்டு விண்ணப்பம் செய்த பொது மக்களுக்கு அதற்கான ஆணைகளை அமைச்சர் கீதா ஜீவன் வழங்கினார்

தொடர்ந்து அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்: தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் ஆட்சி நடத்தி வருகிறார் இதன் காரணமாக தான் வீடு இல்லாத

மக்களுக்கு சொந்த வீட்டை வழங்க வேண்டும் என்ற வகையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் வீடுகள் கட்டி குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகிறது அது மட்டுமின்றி கிராமப்புறங்களில் சொந்த வீடு இல்லாத மக்களுக்கும் வீடு கட்டி வழங்கும் வகையில் கலைஞர் வீடு கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது இதுவரை 2 லட்சம் வீடுகள் எட்டி முடிக்கப்பட்ட நிலையில் மேலும் ஒரு லட்சம் வீடுகள் கட்டுவதற்கான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளது எனவும் தமிழகம் அனைத்து துறை ரீதியாகவும் வளர்ச்சி அடைந்து இந்தியாவிலேயே முதல் மாநிலமாக திகழ்ந்து வருகிறது இதற்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அயராத உழைப்பு தான் காரணம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநகர திமுக செயலாளர் ஆனந்த சேகரன், மாநகர இலக்கிய அணி ஜீவன் ஜேக்கப்,

ஒன்றிய செயலாளர் சரவணகுமார்,மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் அந்தோணி தனுஷ் பாலன், ஒன்றிய துணை செயலாளர் கணேசன், மாவட்ட வர்த்தகர் அணி பிளோமின்ராஜ்,மாவட்ட இளைஞரணி ஸ்டாலின், ஒன்றிய இளைஞரணி நெல்சன்,

ஒன்றிய சுற்றுசூழல் அணி ராஜேந்திரன், வசந்தகுமாரி, வாரியச் செயற்பொறியாளர் மாடசாமி, உதவி பொறியாளர் மணிகண்டன், நகர்ப்புறவாழ்விட மேம்பாட்டு வாரிய நிர்வாகப் பொறியாளர் மாடசாமி உதவிபொறியாளர் எழிலரசி, மகளீரணி ஆரோக்கியமேரி, கிளை செயலாளர் ஜேசுராஜ், ஜோதிடர் முருகன், சேவியர், பாரதி, தர்மலிங்கம், பொன்னுச்சாமி, இம்மானுவேல், மற்றும்கழகநிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

## மற்ற கேஸ் பங்குகளை விட 1லிட்டருக்கு 20ரூபாய்க்கும் மேல் கூடுதல் கட்டணம் வசூலிக்கும், கோவை கேளன்ஜி புதூர் கோ கேஸ் நிறுவனம்

### பங்க்கை முற்றுகையிட்டு போராட்டம் நடத்திய கால் டேக்ஸி, மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களால் பரபரப்பு



கோவை தடாகம் சாலை, கேளன்ஜி புதூர் பகுதியில் கோ கேஸ் நிறுவனத்திற்கு சொந்தமான பங்க் இயங்கி வருகிறது. இப்பகுதியை சேர்ந்த ஆயிரக்கணக்கான டேக்ஸி ஒட்டுநர்கள், ஆட்டோ ஒட்டுநர்கள் இங்கு தங்களது வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பி வருகின்றனர். தற்பொழுது வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர் காரணமாக, தமிழகத்தில் சிலிண்டர் எரிவாயு தட்டுபாடு ஏற்படும் நிலை உள்ளது என்ற செய்தி அறிந்ததும், இந்த கேஸ் நிறுவனம் எந்த வித முன்னறிவிப்பும் இல்லாமல், விலையை உயர்த்தியுள்ளனர். இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன், மற்ற பங்குகளில் இன்றைக்கும் ஆட்டோ எல்பிஜி ஒரு லிட்டர் விலை 64.87-க்கு விற்பனையாகும் நிலையில் இங்கு மட்டும் 84.99 க்கு விற்பனை செய்யப்படுகின்றதுமற்ற பங்குகளை விட 20 ரூபாய்க்கும் மேல் லிட்டருக்கு கூடுதலாக விற்பனை செய்து வருகின்றனர். இது குறித்து வாகன ஒட்டிகள் நிர்வாகத்திடம் கேட்ட பொழுது நிர்வாகம் இஸ்டம் இருந்தால் அடியுங்கள், இல்லைஎன்றால் வெளியே செல்லுங்கள் என அலட்சியமாக கூறியுள்ளது

இதனால் ஆத்திரமடைந்த கால் டாக்ஸி ஓட்டுனர்கள் ஆட்டோ ஓட்டுநர்கள் கேஸ் பங்கை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர் இதனால் அந்த பகுதியில் சற்று பரபரப்பு ஏற்பட்டது தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்துபேசிய கால்டாக்ஸி ஓட்டுநர்கள் கூறியதாவது எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் ஒரே நாளில் 20 ரூபாய்க்கு மேல் லிட்டருக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுவதாகவும் இதுகுறித்து கேள்வி எழுப்பினால் எந்தவித முறையான பதில்களையும் தெரிவிப்பதில்லை விலை உயர்வுக்கான அறிவிப்பு பலகையையும் எங்கும் வைக்கவில்லை மற்ற பங்குகளில் 64 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் பொழுது இங்கு மட்டும் எப்படி விலை 84 ரூபாய்க்கு விற்கப்படும் என்று கேள்வி எழுப்பினர் எனவே தமிழக அரசு உடன் உரிய நடவடிக்கை எடுத்து கால் டாக்ஸி மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வாதாரத்தை சீரமைக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பினர் பரபரப்பு ஏற்பட்டது.

## மகளிர் தினத்தை முன்னிட்டு பந்தலூரில் மருத்துவ முகாம்



மகளிர் தினத்தை முன்னிட்டு பந்தலூர் முழுநேர கிளை நூலகம், மற்றும் மகளிர் தையல் பயிற்சி மையம் ஆகியவற்றில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

பந்தலூர் கிளை நூலகத்தில் பந்தலூர் கிளை நூலக வாசகர் வட்டம், செஞ்சிலுவை சங்க மருத்துவ குழுவினர் இணைந்து நடத்திய மருத்துவ முகாமிற்கு கிளை நூலகர்கள் அறிவழகன், நித்தியகல்யாணி, நுகர்வோர் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம், ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.வாசகர் வட்ட தலைவர் முத்துகுமார் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார். மருத்துவர் அஸ்வந்த் தலைமையில் மருந்தளுநர் நவீன், செவிலியர் சுமதி நிர்வாக அலுவலர் லாய்சன் உள்ளிட்ட மருத்துவ குழுவினர் சிகிச்சை அளித்தனர். முகாமில் வாசகர்கள், பொதுமக்கள், போட்டி தேர்வு மாணவர்கள் உட்பட பலர் இரத்த அழுத்தம் இரத்த சர்க்கரை அளவு மற்றும் இதர பொது மருத்துவ பரிசோதனை செய்து கொண்டு மருந்து மாத்திரைகள் பெற்று சென்றனர்.

அதுபோல பந்தலூர் மகளிர் தையல் பயிற்சி மையத்தில் உலகமகளிர் தினத்தை முன்னிட்டு கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், ஆல் தி சில்ரன், செஞ்சிலுவை சங்க மருத்துவ குழுவினர் சார்பில் நடைபெற்ற மருத்துவ முகாமிற்கு கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் தலைமை தாங்கினார் ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித், தையல் பயிற்சி மையம் ஆசிரியர் ராஜேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஞ்சிலுவை சங்க மருத்துவ குழு மருத்துவர் அஸ்வந்த் தலைமையில் மருத்துவக்குழுவினர்சிகிச்சைஅளித்தனர். இதில் தையல் பயிற்சி மைய மாணவிகள் உட்பட 50க்கும் மேற்பட்டோர் இரத்த அழுத்தம், இரத்த சர்க்கரை அளவு, மற்றும் பொது மருத்துவ சிகிச்சை பரிசோதனை செய்து கொண்டனர்.

தமிழக சட்டமன்ற பொதுதேர்தலை முன்னிட்டு

## மாவட்ட காவல் துறை, மத்திய தொழில்துறை பாதுகாப்பு படையினருடன் இணைந்து கொடி அணி வகுப்பு

தமிழக சட்டமன்ற பொது தேர்தல் 2026-யை முன்னிட்டுதேர்தலில்பொதுமக்கள்அச்சமின்றி வாக்களிக்கவும், வாக்களிக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தவும் மற்றும் பொதுமக்களுக்கான பாதுகாப்பை உறுதிபடுத்தும் விதமாக 11.03.2026ம் தேதி அன்று மாலை, ஈரோடு மாவட்டம் பெருந்துறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெருந்துறை காவல் நிலைய சரகத்தில் பெருந்துறை உட்கோட்ட காவல்துறையினர்மற்றும்மத்தியதொழில்துறை பாதுகாப்பு படையினர் கலந்துகொண்ட கொடி அணிவகுப்பு,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா தலைமையில் நடைபெற்றது. மேற்படி கொடி அணிவகுப்பானது பெருந்துறை காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டு பெருந்துறை அரசு மருத்துவமனை ரவுண்டானா பெருந்துறை பழைய பேருந்து நிலையம் ரவுண்டானா - புதிய பேருந்து நிலையம் கோட்டை முனியப்பன் கோவில் வழியாக - ராஜவீதி - மேக்கூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி குன்னத்தூர் ரோடு- பெத்தாம்பாளையம் பிரிவு குன்னத்தூர் நால்ரோடு சந்திப்பு - மீண்டும் பெருந்துறை காவல் நிலையத்தில் முடிவடைந்தது. மேற்படி அணிவகுப்பில் பெருந்துறை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் K.G.சிவக்குமார், 9 காவல் ஆய்வாளர்கள், 4 உதவி ஆய்வாளர்கள், 37 காவல் ஆளிநர்கள், மத்திய தொழில்துறை பாதுகாப்பு படையைச் சேர்ந்த 2 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 52 ஆளிநர்கள் என மொத்தம் 106 நபர்கள் கலந்து கொண்டனர். மேலும் இது போன்று மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் கொடி அணிவகுப்பு நடைபெறும் என்பதை மாவட்ட காவல்துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.



தமிழ்நாடு வீட்டுவசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (12.03.2026) ஈரோடு மாவட்டம் காரைவாய்க்கால் பகுதியில் உள்ள காலிங்கராயன் வாய்க்கால் மைல் 13/7ல் உள்ள தொட்டிபாலம் சீரமைப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, செயற்பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை திருமூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.



2025, 26 கல்வி ஆண்டிற்கான 9ம் வகுப்பு ஊரக திறனாய்வு தேர்வு தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது. இதில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்றனர். சேலம் மாவட்டத்தில் 4,300 பேர் தேர்வு எழுதினர். ஜலகண்டாபுரம் அரசுப் பள்ளி மாணவிகள் மட்டும் 21 பேர் தேர்ச்சி பெற்று, மாவட்ட அளவில் அதிக மாணவிகள் தேர்ச்சி பெற்ற பள்ளி என்ற பெருமையைப் பெற்றனர். சாதனை படைத்த மாணவிகள் மற்றும் பயிற்சி அளித்த ஆசிரியர அருண்கார்த்திகேயனை பள்ளியின் தலைமை ஆசிரியை கலா, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் சண்முகசுந்தரம் ஆகியோர் பாராட்டினர்



எதிர்வரும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு (12.03.2026) ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குரிய வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வழங்கக்கூடிய பயிற்சி மையமான ரங்கம்பாளையம், கொங்கு கல்வி நிலையத்தினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் இனாம் நிலங்களில் ஏற்படுத்தப்பட்ட பத்திரப்பதிவுதடை மற்றும் தகுதிவாய்ந்த பட்டாநிலங்களின் வழிகாட்டி மதிப்பினை “பூஜ்ஜியம்” என மதிப்பீடு வழங்கப்பட்ட தடையினை நீக்குவது தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்த குமார், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (பதிவுகள் சரிபார்ப்பு) (திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர்), அ.மயில், ஈரோடு மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) (பொறுப்பு) அ.செல்வராஜ், ஈரோடு மாவட்ட நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை, உதவி இயக்குநர் க.ஜெய்சிவக்குமார், ஈரோடு தேசிய தகவலியல் அலுவலர் ஜெகன் மற்றும் ஈரோடு மற்றும் கோபிசெட்டிபாளையம் மாவட்ட பதிவாளர் (பத்திரப்பதிவு) அலுவலக அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



திருவான்மியூரில், வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் பற்றாக்குறையால் முன்பதிவு செய்தும் கிடைக்காத வாடிக்கையாளர்கள் கேஸ் ஏஜென்சி வெளியே நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாச்சலம் மற்றும் திட்டக்குடி பகுதியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை புரிந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். அதன்படி நேற்று மாலை 4 மணிக்கு திட்டக்குடியில் சார்பு அணி சார்பில் நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். பின்னர் வதிஷ்டபுரம் மற்றும் விருதாச்சலம் அரசு கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரியின் அருகிலுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூலகத்தை திறந்து வைத்தார். தொடர்ந்து மாவட்ட இளைஞரணி சார்பில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கனேஷ்குமார் அவர்கள் 10 லட்சத்துக்கான காசோலையை இளைஞர் அணி அறக்கட்டளைக்கு வழங்கினார், தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமை தாங்கினார், முன்னதாக நகர செயலாளர் தண்டபாணி அவர்கள் தலைமையில் விருதாச்சலம் கடைவீதியில் டாக்டர் சங்கவி முருகதாஸ், மற்றும் மருத்துவர் முருகதாஸ் வரவேற்பு அளித்தனர், அதில் மண்டல செயலாளர் அப்துல் மாலிக், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கணேஷ் குமார், மற்றும் எம்எல்ஏ க்கள் சபா ராஜேந்திரன், ராதா கிருஷ்ணன், மாநில இலக்கிய அணி செயலாளர் வி இ டி கலைச்செல்வன், மற்றும் ஒன்று செயலாளர்கள் பாவாடை கோவிந்தசாமி, கோட்டேரி சுரேஷ், ஆசைத்தம்பி மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ராமு ஆகியோர் கலந்து கொண்டு வரவேற்பு அளித்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (12.03.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தின்சார்பில்வன்கொடுமையால்பாதிக்கப்பட்டவரின்வாரிசுதாரரானநந்தினி என்பவருக்கு பெருந்துறை வட்டாரம், வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் /ஊர் நல அலுவலர் நிலை2 பணி நியமன ஆணையினை வழங்கினார். உடன் ஈரோடு மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கு.மகேஸ்வரி உள்ளார்.

## ஈரோடு மதுவிலக்கு போலீசார் ரெயில் நிலையம் அருகில் நடத்திய சோதனையில் கஞ்சாவை கடத்தி வந்தவர் கைது



ஈரோடு மாவட்டத்தில் சட்ட விரோத செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா நேரடி மேற்பார்வையில் பல்வேறுதடுப்புநடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் இன்று 10.03.2026 ம் தேதி ஈரோடுஇரயில்நிலையம்அருகில்ஈரோடுமதுவிலக்கு போலீசார் நடத்திய சோதனையில் சந்தேகப்படும்படியாக வந்த சுபாங்கர் மொண்டல் (30), த/பெ.சுதன்சு மண்டல், பம்னம்பாடு கிராமம், முர்ஷிடாபேடு மாவட்டம்,மேற்குவங்காளம்நபரைபிடித்துசோதனை செய்ததில், மேற்படி எதிரியிடம் ரூ.7,00,000/– மதிப்புள்ள 14.00 கிலோ எடை கொண்ட கஞ்சா பொட்டலங்களை எடுத்து வந்தது தெரியவந்தது. மேற்படி கஞ்சாவை கடத்தி வந்த எதிரியை கைது செய்து,வழக்குபதிவுசெய்யப்பட்டுஎதிரியைநீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட உள்ளார் என்பதை மாவட்ட காவல்துறைசார்பில்தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## பிரியாணிக்கு முக்கியத்துவம்: ‘2 நாளுக்கு மேல் தாங்காது’ திணறும் சென்னை உணவகங்கள்



சென்னை: இன்னும் 2 நாள்கள் இதே நிலை தொடர்ந்தால், உணவகங்களை மூட வேண்டிய சூழல் ஏற்படும் என உணவக உரிமையாளர் தெரிவித்துள்ளார். அதே நேரம், பெரும்பாலான கடைகளில்மதியசாப்பாட்டிற்காகபிரியாணிமட்டுமே சமைக்கப்படுகிறது.

சர்வதேச வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி நிலையால், தமிழ்நாட்டில் கடந்த 2 தினங்களாக வணிக ரீதியிலான சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், உணவகங்கள் பல்வேறு சிக்கலை சந்தித்து வருகிறது.

முன்னதாக அறிக்கை வெளியிட்ட மத்திய அரசு, "மருத்துவமனைகள் மற்றும் வீடுகளுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். வணிக ரீதியிலான சிலிண்டர்களை விநியோகம் செய்வதில் கட்டுப்பாடுகள் அவசியம்" இவ்வாறு தெரிவித்திருந்தது.

இது உணவக உரிமையாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில்,சில இடங்களில் சிலிண்டர் கிடைக்காததால் உணவு தயாரிப்பை குறைத்தும், சில உணவகங்கள் விறகு அடுப்புகளை மீண்டும் பயன்படுத்தும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளன. சென்னை தாம்பரம் அருகே உள்ள நாச்சியார் உணவக உரிமையாளர் தேவாவை சந்தித்து, அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்து ஈடிவி பாரத் கேட்டறிந்தது.

தாம்பரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 4 உணவகங்களை இவர்கள் நடத்தி வருகிறார்கள். கடந்த 3 நாள்களாக இவர்களின் உணவகங்கள் மட்டுமின்றி, தாம்பரத்தில் உள்ள பல்வேறு உணவகங்களின் உணவு பட்டியல்கள் குறைக்கப்பட்டுள்ளன.

நாச்சியார் உணவகத்தில் காலை விற்பனை செய்யப்படும் இட்லி, தோசை, பூரி, வடை என அனைத்தையும் நிறுத்தி உள்ளதாக தேவா தெரிவித்தார். 'மதிய சாப்பாட்டிற்கு பிரியாணி மட்டுமே சமைத்துள்ளோம்' என்று கூறிய அவர், சைவ சாப்பாடு, வெரைட்டி ரைஸ் போன்ற உணவு வகைகளை சமைப்பதில்லை என்றார். மேலும், இந்த கடையில் இரவு உணவாக தோசை மட்டுமே தற்போது சமைத்து வருகின்றனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (12.03.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி 2027ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பாக துறை சார்ந்த தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான முதற்கட்ட பயிற்சியினை துவக்கி வைத்து, பேசினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் தேன்மொழி உட்பட பலர் உள்ளனர்.

## 3 சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த தொழிலாளிக்கு தூக்கு தண்டனை

திருநெல்வேலி:மூன்று சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த கூலித் தொழிலாளிக்கு தூக்கு தண்டனை விதித்து மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியுள்ளது. நெல்லை மேலப்பாளையத்தை அடுத்த குறிச்சி அருகே உள்ள அழகிரிபுரம் பகுதியைச் சேர்ந்தவர் ஆனந்த் சேகர் (வயது 41). கூலித் தொழிலாளியான இவருக்கு திருமணமாகி 3 வயதில் ஒரு குழந்தை உள்ளது. இவர் கடந்த 2023–ம் ஆண்டு 6,7 மற்றும் 8 வயதுடைய மூன்று சிறுமிகளை ஒரே நேரத்தில் வீட்டிற்குள் அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்ததாகத் தெரிகிறது.

இந்த சம்பவத்தை வெளியே யாரிடமாவது கூறினால் கொலை செய்து விடுவதாக சிறுமிகளை ஆனந்த் சேகர் மிரட்டியுள்ளார். பயந்து போன சிறுமிகள் இது குறித்து யாரிடமும் வாய் திறக்கவில்லை. எனினும், சிறுமிகளின் அன்றாட நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதை கவனித்த பெற்றோர்கள், சிறுமிகளை தனியே அழைத்து விசாரித்துள்ளனர். அப்போது, சிறுமிகள் தங்களுக்கு நேர்ந்த கொடுமையை பெற்றோர்களிடம் தெரிவித்துள்ளனர். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த சிறுமியின் பெற்றோர்கள், பாளையங்கோட்டை அனைத்துமகளிர்காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். இதையடுத்து, கூலித் தொழிலாளி ஆனந்த் சேகர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்த காவல் துறையினர், அவரை கைது செய்து பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைத்தனர். இது தொடர்பான வழக்கு நெல்லை மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில் போக்சோ நீதிமன்ற நீதிபதி சுரேஷ் குமார் இன்று (மார்ச் 12) தீர்ப்பளித்தார். அவர் தீர்ப்பில், இது சமூகத்தில் நடைபெறும்



அரிதிலும் அரிதான வழக்குஎனசுட்டிக்காட்டினார். பிஞ்சு குழந்தைகளை கொடூரமான முறையில் பாலியல் வன்கொடுமை செய்த ஆனந்த்சேகருக்குதூக்கு தண்டனை விதித்தி தீர்ப்பளித்தார்.

மேலும் பாதிக்கப்பட்ட மூன்று சிறுமிகளுக்கும் தமிழ்நாடு அரசு சார்பில் தலா ரூபாய் 7 லட்சம் இழப்பீடாக வழங்க வேண்டும் எனவும் நீதிபதி தனது தீர்ப்பில் உத்தரவிட்டார். இதையடுத்து, ஆனந்த் சேகர் பலத்த காவல் துறை பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டு மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.